திரு. சி. வே. வேலப்பன் : தலைவர் அவர்களே சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப் பிரிக்கிற போது எந்த எந்த இடங்களை மாவட்டத் தலைநகராக வைக்க உத்தேசம் உண்டு என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையயா : என்னிடத்தில் இப்போது அந்தத் தகவல் இல்லையென்றாலும் நினைவில் வைத்துச் சொல்கிறேன். ஒரு பகுதிக்கு சேலம் தலைநகரம். மற்றொரு பகுதிக்கு கிருஷ்ணகிரி தலைநகரமாக இருக்கும்.

Small-pox Vaccine

* 395 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Russian Small-pox Vaccine produces more severe re-action; and

(*b*) whether the Government have issued any instructions regarding its use?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இந்த அம்மைப் பால் குத்தியதால் சிலருக்குக் கடுமையான விளைவுகள் ஏற்பட்டதாகத் தெரிந்தது. ஆனால் எதிர்பாராத விளைவு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

(இ) அரசாங்கம் பிரத்யேக உத்தரவ எதையும் பிறப்பிக்கவில்லை.

திரு. செ. மாதவன் : இந்த அம்மைப்பாலை ஒரு குறிப்பிட்ட வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குக் குத்தக் கூடாது என்று உத்தரவிட்டது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரி உத்தரவு ஒன்றும் பிறப்பிக்கப்படவில்லை. இரண்டு அல்லது மூன்று முறை குத்துவதனால் குழந்தைகளிடத்தில் விளைவு அதிகமாக இருக்கக் கூடும் என்ற காரணத்தினால் ஒருமுறை குத்தினால் போதும் என்று தான் சொல்லப்பட்டது.

நூல் நூற்பு யூனிட்டுகள்

*** 396 கேள்வி.—திரு. முனு. ஆதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் இம்மாநிலத்தில் எங்கெங்கு 32 கதிரியக்கங் கொண்ட யூனிட்டுகள் (32 **spindle spinning units**) கூட்டுறவுத் துறையில் நிறுவ உத்தேசம் ?

(இ) அங்ஙனம் நிறுவ வகுக்கப்பட்டுள்ள விதி முறைகள் யாவை ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 32 கதிர்கள் கொண்ட நூற்பு ஆலை ஒன்றை 1963-ல் நிறுவும் உத்தேசம் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.